بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 செப்டம்பர் 2020 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

اَشۡهَدُ اَنۡ لَّاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِیۡكَ لَهٗ وَاَشۡهَدُ اَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ اَمَّا بَعۡدُ فَاَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّیۡطٰنِ الرَّجِیۡمِ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ - اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِیۡنَ - الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ - مٰلِكِ یَوۡمِ الدِّیۡنِ - اِیَّاكَ نَعۡبُدُ وَاِیَّاكَ نَسۡتَعِیۡنُ -

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ - صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡهِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡهِمۡ وَلَا الضَّآلِّیۡنَ

اَلَّذِیۡنَ اسۡتَجَابُوۡا لِلّٰهِ وَالرَّسُوۡلِ مِنۡۢ بَعۡدِ مَاۤ اَصَابَهُمُ الۡقَرۡحُ ؕۛ لِلَّذِیۡنَ اَحۡسَنُوۡا مِنۡهُمۡ وَاتَّقَوۡا اَجۡرٌ عَظِیۡمٌ

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: தங்களுக்குக் காயம் ஏற்பட்டதன் பிறகு(ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள், தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்க்கும், இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு. (3:173)

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களைப் பற்றி சில நற்குறிப்புகளை எடுத்துரைப்பது எஞ்சியிருந்தது. அதனை இன்று நான் எடுத்துரைப்பேன்.

நான் தற்போது ஓதிய இந்த திருக்குர்ஆன் வசனம் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உர்வா அவர்களிடம் கூறினார்கள்: எனது சகோதரியின் மகனே! உமது முன்னோர்களான ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோர் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட சஹாபாக்களில் அடங்குவர்.

உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்றபோதும், இணை வைப்பவர்கள் திரும்பிவிட்ட போதும் அவர்கள் மீண்டும் திரும்பி வந்து விடுவார்களோ என்ற அபாயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணர்ந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை யார் யார் எல்லாம் பின்தொடர்ந்து செல்வார்கள் என்று கேட்டார்கள். அந்த கணத்தில் அவர்களில் 70 சஹாபாக்கள் ஆயத்தமாகி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இவர்களில் அடங்குவர். மேலும் இவர்கள் இருவரும் காயமுற்றவர்களில் அடங்குவர்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எனது காதுகளால் இவ்வாறு கூறக்கேட்டேன். தல்ஹா மற்றும் சுபைர் ஆகிய இருவரும் சுவர்க்கத்தில் எனது அண்டை அயலர்களாக இருப்பர்.

ஹஸ்ரத் சயீத் பின் ஜுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி), ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் (ரலி) ஆகிய சஹாபாக்களின் அந்தஸ்து எப்படிப்பட்டதென்றால் போர் மைதானத்தில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் நின்று சண்டையிட்டு வந்தனர். தொழுகையில் அன்னாருக்கு பின் நின்று தொழுது வந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை எந்த எழுத்தாளர்களைக் கொண்டு எழுதி வந்தார்களோ அவர்களில் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களது பெயரும் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் வீடுகளுக்கான எல்லையை நிர்ணயித்தபோது ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்கு பெரும் நிலம் ஒன்றை நிர்ணயித்தார்கள்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: ஒரு முறை பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களில் ஒருவரான அன்ஸாரி சஹாபி ஒருவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் நீரூற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதில் சச்சரவு ஏற்பட்டது. அந்த இருவரும் அந்த ஊற்றிலிருந்தே தமது வயல்களுக்கு நீர் பாய்ச்சி வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விஷயத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம், சுபைரே! நீர் உமது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சிய பிறகு உமது அண்டை அயலாருக்கும் தண்ணீர் கொடுப்பீராக என்று கூறினார்கள்.

அந்த அன்ஸாரி சஹாபிக்கு இந்த விஷயம் பிடிக்கவில்லை. அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! இவர் உங்களது தந்தையினுடைய சகோதரி மகன் என்பதால் நீங்கள் இந்த தீர்ப்பை கூறுகின்றீர்களா? என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகம் மாறியது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம், நீர் உமது நிலத்திற்கு நீர் பாய்ச்சிவிட்டு உமது பகுதியிலுள்ள நீர்த்தளங்கள் நிரம்பிவிடாதவரை தண்ணீரை நீரே தடுத்து நிறுத்தி வைத்துக் கொள்வீராக என்று கூறினார்கள்.

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்குரிய முழுமையான உரிமையை வழங்கி விட்டார்கள். ஆனால் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அன்ஸாரி சஹாபியின் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் ஆலோசனை வழங்கி இருந்தார்கள்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! இந்த சம்பவம் தொடர்பாகவே கீழ்க்கண்ட வசனம் இறங்கியதாக நான் கருதுகிறேன்.

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا

அதாவது உம்முடைய இறைவன் மீது ஆணையாக! அவர்கள் தங்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்வற்றில் உம்மை நீதிபதியாக ஆக்கி, பின்னர் நீர் வழங்குகின்ற தீர்ப்பினை (தம்) உள்ளங்களில் எவ்வித தயக்கத்தையும் காட்டாமல் ஏற்று, முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்காதவரை அவர்கள் ஒருபோதும் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள். **(4:66)**

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ثُمَّ إِنَّكُمْ يَوْمَ الْقِيَامَةِ عِندَ رَبِّكُمْ تَخْتَصِمُونَ

அதாவது பின்னர் மறுமை நாளில் நிச்சயமாக நீங்கள் உங்கள் இறைவன் முன் (தத்தமது கொள்கைகளைப் பற்றி) ஒருவரோடொருவர் வாக்குவாதம் செய்து கொள்வீர்கள் (39:32) என்ற இந்த வசனம் இறங்கியபோது அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதன் பொருள் நாங்கள் உலக சண்டைகள் செய்வோமா? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள்.

பிறகு இந்த வசனம் இறங்கியது. ثُمَّ لَتُسْأَلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيمِ (102:9)

அதாவது அந்த நாளில் நீங்கள் உங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடையைப் பற்றி நிச்சயம் விசாரிக்கப்படுவீர்கள். அப்போது ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களிடம் எந்த அருட்கொடையைப் பற்றி விசாரிக்கப்படும். எங்களிடமே வெறும் பேரீத்தம் பழங்களும், தண்ணீரும் மட்டுமே உள்ளன என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த அருட்கொடைகளைப் பெறுவதற்குரிய காலம் மிக விரைவில் வர உள்ளது என்று கூறினார்கள்.

ஒருவர் ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம் கூறினார்கள்: நான் உங்களது உடலில் காயங்களின் தழும்புகளை பார்த்தேன். இதற்கு முன் வேறு எவரது உடலிலும் இதுபோன்ற காயங்களை நான் ஒருபோதும் கண்டதில்லை. அதற்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள், இறைவன் மீது ஆணையாக! இந்த தழும்புகள் அனைத்தும் இறைவனது வழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து போர் புரிந்தபோது ஏற்பட்ட காயங்களாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம் ஓராயிரம் அடிமைகள் இருந்தனர். அவர்கள் விலை நிலத்திலிருந்து விளைச்சல் செய்வதற்காக பணியாற்றி வந்தனர். அன்னார் அதிலிருந்து எதனையும் வீட்டிற்கு கொண்டு வர மாட்டார்கள். முழுவதையும் சதகா கொடுத்து விடுவார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் மார்க்கத்தின் தூண்களில் ஒரு தூண் ஆவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஒட்டகப் போரின் நாளன்று போருக்காக என்னை அழைத்தார்கள். மேலும் கூறினார்கள்: எனது அன்பிற்குரிய மகனே! இன்று நான் அநீதியிழைக்கப்பட்டவனாக கொலை செய்யப்பட்டு விடுவேன் என்றே தோன்றுகிறது. எனது கடனைப் பற்றியே எனக்கு மிக அதிகமான கவலை உள்ளது. பின்னர் கூறினார்கள்: எனது மகனே! சொத்தை விற்று கடனை செலுத்து விடுவீராக. நான் மூன்றில் ஒரு பங்கை வஸிய்யத் செய்து விடுகின்றேன். மேலும் நான் வஸிய்யத் செய்கின்றேன். கடனை செலுத்திய பிறகு ஏதாவது எஞ்சியிருந்தால் அதில் மூன்றில் ஒரு பங்கு உமது பிள்ளைக்குரியதாகும். மேலும் கூறினார்கள்: எனது மகனே! ஒருவேளை உம்மால் கடன் தொகையில் சிறிதளவை செலுத்த முடியாமல் போய்விட்டால் நீர் எனது எஜமானரிடம் உதவி தேட வேண்டும்.

அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களின் எஜமானர் யார் என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள், அல்லாஹ் என்று கூறினார்கள். அதன் பிறகு நான் எப்போதெல்லாம் அன்னாரின் கடன் தொடர்பான வஸிய்யத்தில் சிக்கலை எதிர்கொண்டேனோ அப்போது சுபைரின் இறைவனே, நீ அவரது கடனை செலுத்தி விடுவாயாக என்று கூறி வந்தேன். இறைவனும் அதை வழங்கி விடுவான். அதாவது அல்லாஹ் அதன் பிறகு ஏதாவதொரு ஏற்பாட்டை செய்து விடுவான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பான சூழல்களைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் நடைபெற்றது. பைஅத் வாங்கும்படி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். அப்போது அன்னார் பல முறை மறுத்த பிறகு அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மக்களிடம் அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். சில பெரிய சஹாபாக்கள் அப்போது மதீனாவிலிருந்து வெளியே இருந்தார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சுபைர் அவர்கள் தொடர்பாக வருகின்றது. ஹஸ்ரத் ஹகீம் பின் ஜபலா மற்றும் மாலிக் பின் அஷ்தர் ஆகியோர் அவர்களை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்கள் வாளை ஏந்திக் கொண்டு அவர்களுக்கு முன்னால் நின்றார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்றால் செய்யுங்கள். இல்லையென்றால் நாங்கள் இப்போதே உங்களை கொன்று விடுவோம் என்று கூறினர்.

அவர்கள் பைஅத் செய்தபோது கூறினார்கள்: நாங்கள் இந்த நிபந்தனையின் அடிப்படையில் பைஅத் செய்கின்றோம். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கொலையாளிகளை நீங்கள் தண்டிக்க வேண்டும். ஆனால் பிற்காலத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கொலையாளிகளை தண்டிப்பதில் விரைவு காட்டாதபோது அவர்கள் பைஅத்திலிருந்து விலகி விட்டார்கள். மேலும் மக்காவிலிருந்து மதீனாவிற்கு சென்று விட்டார்கள். அந்த மக்களை சார்ந்த கூட்டத்தினர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலைக்கு பழிவாங்குவதற்காக ஜிஹாதிற்கான அறிவிப்பை செய்ய ஒப்புக் கொள்ள வைத்தனர். ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சுபைர் அவர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். அதன் விளைவாக ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி) ஆகியோருக்கிடையில் போர் மூண்டது. அது ஒட்டகப் போர் என்று கூறப்படுகிறது.

அந்த போரின் தொடக்கத்திலேயே ஹஸ்ரத் சுபைர் அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களின் நாவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு முன்னறிவிப்பை செவியுற்று போர் மைதானத்திலிருந்து விலகி விட்டார்கள்.

அன்னார் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீர் அலி அவர்களுடன் போரிடுவீர். மேலும் உம் புறமிருந்து வரம்பு மீறுதல் நிகழும். பிறகு ஹஸ்ரத் சுபைர் அவர்கள், தாம் ஹஸ்ரத் அலி அவர்களுடன் போர் செய்ய மாட்டேன் என்று சத்தியம் செய்தார்கள். மற்றொரு புறம் ஹஸ்ரத் தல்ஹா அவர்களும் தமது மரணத்திற்கு முன்பாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் சுபைர் அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பிச் செல்ல எண்ணி புறப்பட்டபோது உமைர் பின் ஜர்மூஸ் என்பவன் குதிரையில் சவாரி செய்து அன்னாருக்கு பின்னாலிருந்து வந்தான். மேலும் ஈட்டியினால் அன்னார் மீது தாக்குதல் தொடுத்தான். மேலும் இலேசாக காயப்படுத்தினான். ஹஸ்ரத் சுபைர் அவர்களும் அவன் மீது தாக்குதல் தொடுத்தார்கள். இப்னு ஜர்மூஸ் தான் கொலை செய்யப்பட உள்ளோம் என்பதை உணர்ந்தபோது அவன் தனது இரண்டு நண்பர்களையும் குரல் கொடுத்து அழைத்தான். அவர்களும் இணைந்து கொண்டு தாக்குதல் தொடுத்தனர். எந்த அளவுக்கு என்றால் அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டனர்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கிய பிறகு இப்னு ஜர்மூஸ் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடத்தில் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் தலையையும் வாளையும் கொண்டு வந்தான். மேலும் உள்ளே வர அனுமதி வேண்டினான். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், இப்னு ஸஃப்யா ஹஸ்ரத் சுபைர் அவர்களை ஷஹீதாக்கியவன் நரகத்தில் நுழைவான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) சவா என்ற பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. இப்னு ஜர்மூஸ் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் அனுமதி கேட்டபோது ஹஸ்ரத் அலி அவர்கள் அவனிடமிருந்து விலகி இருக்கவே விரும்பினார்கள். அப்போது அவன் சுபைர் துன்பம் தருபவர்களை சார்ந்தவராக இருக்கவில்லையா? என்று கேட்டான். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: உமது முகம் மண்ணாகட்டுமாக. நான் நம்புவதென்னவென்றால், தல்ஹா மற்றும் சுபைர் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் இந்த வசனத்திற்கு உரியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அவர்களைப் பற்றி இந்த வசனத்தில் கூறுகின்றான்.

وَنَزَعْنَا مَا فِیْ صُدُوْرِهِمْ مِّنْ غِلٍّ اِخْوَانًا عَلٰی سُرُرٍ مُّتَقٰبِلِیْنَ

அதாவது அவர்களின் உள்ளங்களிலுள்ள பகைமை உணர்வை நாம் அகற்றி விடுவோம். அதனால் அவர்கள் (சுவர்க்கத்தில்) ஒருவரையொருவர் நோக்கிய வண்ணம் சகோதரர்களாய் மஞ்சங்களில் இருப்பர். **(15:48)**

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், கேம்பியாவின் நாயிப் அமீர் மதிப்பிற்குரிய அல்ஹாஜி இப்ராஹீம் முபாயீ சாஹிப், கராச்சி நாயிப் அமீர் மதிப்பிற்குரிய நயீம் அஹ்மது கான் சாஹிப், ஜெர்மனியைச் சார்ந்த மதிப்பிற்குரிய புஷ்ரா பேகம் சாஹிபா ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக்கூறினார்கள். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழப்படும் என்றும் அறிவிப்புச் செய்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ
اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ
لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ. عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ.

**மொழியாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்**